22.04.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வளர வேண்டிய உயர் தொழில்...

ஒரு நாடு வளமான நாடு என்பதன் அடையாளமே அந்த நாட்டில் மற்ற துறைகளைவிட உணவு உற்பத்தியில் எப்படி உள்ளது என்பதைப் பொறுத்தே அமையும். அதனால்தான் வான்புகழ் வள்ளுவரும் விவசாயத்தின் தனித்துவம் கருதி, சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால் உழந்தும் உழவே தலை. - என்றார். உலகம் சுழன்று சுழன்று பல தொழில்கள் செய்தாலும் அவை அனைத்தும் ஏர்த் தொழிலின் உயர்வை நம்பியே நடக்கிறது. அதனால் விவசாயத்தில் எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் அனைத்து தொழிலுக்கும் தலைமைத் தொழில் விவசாயமே என்று கூறுகிறார். ஆனால், துணைக்கண்டம் முழுவதுமே விவசாயமும் விவசாயிகளும் ஒரு தேக்க நிலையிலும், தண்டிக்கப்பட்ட நிலையிலும் திக்கற்ற நிலையிலுமே உள்ளனர். நம் நாட்டில் அனைத்து மாநிலங்களிலும் விவசாயத் துறையின் நிலை குழப்பமாகவே உள்ளது. அதனால் அனைத்தும் குழப்பமாகி நாட்டின் வளர்ச்சியே தேக்கமடைந்துள்ளது. இந்தியாவில் நமக்கு இருக்கும் வாய்ப்பு நம்முடைய விவசாய நிலங்களும், அது சார்ந்த இயற்கை வளங்களுமே ஆகும். அதை சரிவர பராமரிக்காவிட்டால் அனைத்து வாய்ப்புகளையும் இழந்தவர்களாகிவிடுவோம்.

ஏனெனில், இப்படியே விவசாயம் சென்றால் எதிர்காலத்தில் உணவிற்காக பிற நாடுகளிடம் கையேந்தும் நிலையும், தண்ணீர்ப் பற்றாக்குறை, சுகாதாரச் சீர்கேடு, வறுமை, சுற்றுச்சூழல் பாதிப்படைதல், அதன் காரணமாக இந்தியத் துணைக் கண்டம் வெப்பமடைதல், அதனால் வரும் இயற்கைப் பேரிடர்களால் நாம் பெரும்பாதிப்பு அடையும் நிலையும் வரலாம். எதிர்காலத்தில் மிக் பெரும் பிரச்னைகளாக இருக்கப் போவது இவைகளேயாகும். இவை அத்தனையையும் விவசாய உற்பத்தி மூலம் சரிசெய்து விடலாம்.

யாரோ விவசாயத்தில் கஷ்டப்படுகிறார்கள், எப்படியோ விவசாயம் நடக்கிறது, உணவு உற்பத்தியாகிறது என்ற நிலைமாற வேண்டும். அனைத்து மாநில அரசுகளும் விவசாயத்திற்கு என தனி பட்ஜெட், விவசாயம் நடக்க உகந்த சூழ்நிலைகளை தாலுகா வாரியாக உருவாக்க வேண்டும்.

இன்று போட்டியற்ற தொழிலாக விளங்குவதும், வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளதும் விவசாயமே. மற்ற தொழில்கள் அனைத்திலும் கடும் போட்டி நிலவுகிறது. படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் அந்த தொழில் மீதும் அனைவருக்கும் ஈடுபாட்டையும் மேலும் அதிக அளவில் விஞ்ஞான தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியையும் அதிக அளவில் பெருக்க முடியும்.

எல்லோரும் படிக்க வேண்டும், வேலைக்குச் செல்ல வேண்டும், மருத்துவராக வேண்டும், பொறியாளராக வேண்டும், தொழில் செய்ய வேண்டும், வெளிநாடு செல்ல வேண்டும் என்று சொல்கிறார்களே தவிர, விவசாயம் செய்ய வேண்டும் என்று யாரும் சொல்வதில்லை. அப்படியானால், விவசாயம் யார்தான் செய்வது? பிற தொழில்களுக்கு இருக்கும் மரியாதை விவசாயத்திற்கு இல்லாத நிலையே உள்ளது. ஊடகங்கள், பத்திரிகைகளிலும் சமூக பிரச்னைகள், அரசியல், தொழில் பற்றிய விவாதங்கள் செய்வது போல் விவசாயம் பற்றிய கருத்தரங்குகள் நடைபெறுவதில்லை. இங்கிலாந்து போன்ற நாடுகளில் ராணுவப் பணிகளில் ஒரு குறிப்பிட்ட காலம் அனைவரும் ஈடுபடுவது போல நம் நாட்டில் அனைவரும் விவசாயத்தில் ஏதாவது ஒரு வகையில் பங்களிப்பு செய்ய வேண்டும்.

இனி விவசாயம் செழிக்க வேண்டும் எனில் தற்போதைய உலகச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நம்முடைய விவசாயக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். நவீன இயந்திர முறை விவசாயம் உருவாக வேண்டும். மிகப் பெரும் வணிகக்கூட்டாண்மை நிறுவனங்கள் விவசாயத்தில் குறிப்பிட்ட அளவு பங்களிப்புச் செய்ய வேண்டும். சிறு சிறு நிலங்களை இணைத்து கூட்டுப் பண்ணைகளை உருவாக்க வேண்டும்.

நம் உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்கே அதிக அளவில் இருப்பது போன்றும், நமது ஏற்றுமதியில் மற்றவற்றைவிட அதிக அளவில் விவசாயப் பொருள்களையும், இறக்குமதியில் குறைந்த அளவில்

விவசாயப் பொருள்களையும் இறக்குமதி செய்யும் வகையில் விவசாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும். அப்போதுதான் நாடும் நலம் பெறும். விவசாயிகளின் நிலையும் வளமாகும்.

விவசாயிகளின் வருத்தமும், கண்ணீரும் நாட்டின் சாபக்கேடாகும். உலக அளவில் நாம் பெரிய பொருளாதார வலிமை கொண்ட நாடாக உருவாக வேண்டும் எனில், பிற நாடுகள் பிற விஷயங்களில் கவனம் செலுத்துகின்ற நிலையில் நாம் வித்தியாசமாக, மாறுபட்ட அணுகுமுறையாக விவசாயத்தில் கவனம் செலுத்தி அதிக உற்பத்தி, அதிக ஏற்றுமதி, அளவற்ற அன்னிய செலவாணி என்று உருவாக்கலாம். நாம் பொருளாதார பலம் கொண்ட வல்லரசு என்ற நிலையை எளிதில் அடையலாம்.

இனி விவசாயத்தில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களாக விவசாயம் செய்பவர்களுக்கு மரியாதையையும், கௌரவத்தையும் உருவாக்க வேண்டும். விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க வேண்டும், எல்லா வேலைகளுக்கும் ஆள்கள் கிடைக்கிறார்கள். ஆனால், விவசாயத்திற்கு மட்டும் ஆள்கள் கிடைப்பதில்லை. எனவே, விவசாயம் செய்வதற்குத் தேவையான பணியாளர்களை உருவாக்குதல், அவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளித்தல், அந்த தொழில் மீது அவர்களுக்கு ஈர்ப்பை உருவாக்குதல், அவர்களுக்குச் சரியான ஊதியம் கிடைக்க வழி செய்தல் போன்றவற்றை கவனிப்பதற்கு அரசு ஊழியர்களை உருவாக்க வேண்டும். அது சார்ந்த அலுவலகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயிர்கள் சிலவற்றிற்கு அதிக விலையும், சிலவற்றிற்கு உற்பத்தி செலவுகூட கிடைக்காத வகையிலும் உள்ளது. அதை மாற்றும் வகையில், தற்போதைக்கு எந்தப் பயிர் அதிகத் தேவை, எந்தப் பயிர் தேவைக் குறைவு, ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ளவை எவை என்பதையும் அவ்வப்போது விவசாயிகளுக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும். சமச்சீராக அனைத்து பயிர்களையும் உற்பத்தி செய்ய வழி காணவேண்டும். மேலும், விளையும் பொருள்களை சேதமின்றி பதப்படுத்த சேமிப்புக் கிடங்குகள் தாலுகா வாரியாக உருவாக்கப்பட வேண்டும். எந்தப் பகுதிகளில் எந்தப் பயிர் செழிப்பாக வளரும் என்பதையும், ஒவ்வொரு பயிருக்கும் தேவையான அந்த மண் வளத்துக்கு

ஏற்ற வகையில் இயற்கை விவசாயத்தின் அடிப்படையில் மண் வளம் கெடாதவாறு உரம் இடும் முறையை கண்டறிதல் வேண்டும். மின் சேமிப்பு, நீர் சேமிப்பு ஏற்படும் விதமாக அனைத்து புன்செய் விளை நிலங்களும், மலைச்சரிவு நிலங்களும் நுண் நீர்ப் பாசன முறையைப் பெற வேண்டும்.

மண்வளம் கெடாமல் இருக்க இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும். ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவற்றால் மண்வளம் கெடாமல் விவசாயம் செய்ய வழிவகை செய்ய வேண்டும். எதைப் பற்றியும் யோசிக்காமல் விவசாயம் இயந்திர மயமாக்கப்பட வேண்டும்.

மாணவர்களின் பாடப் புத்தகங்களில் விவசாயம் பற்றிய கருத்துகளை இளமையிலேயே பதிய வைக்க வேண்டும். தொலைக்காட்சிகளில் அனைவரும் பார்க்கும் நேரத்தில் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி விவசாயம் பற்றி விவாதிக்கப்பட வேண்டும்.

விவசாயம் இனி கிராமங்கள் மாத்திரம் இல்லாமல் நகரங்களில் நடைபெற வேண்டும். வீட்டின் மாடியில் காய்கறி வளர்ப்பு, வீட்டின் காலி இடங்கள் மற்றும் பொது இடங்களில் மரம் வளர்ப்பின் மூலம் கார்பன்-டை-ஆக்ஸைடு போன்ற நச்சு வாயுக்களை சமன் செய்தல், ஆக்சிஜன் உற்பத்தி, வெப்பமயமாதலைத் தடுத்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும்.

மகாகவி பாரதி சொன்னது போல் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலை செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்பதற்கு இலக்கணமாக முக்கிய கலைச் செல்வமான விவசாயக்கிற்கு வெளிநாடுகளில் உள்ள நமக்கு உபயோகமான வழிமுறைகளைக் கண்டறிந்து நம் நாட்டில் செயல்படுத்த வேண்டும்.

விவசாயம் சார்ந்த துணைத் தொழில்கள் செழிப்புற வேண்டும். மரம் வளர்ப்பு, விவசாயம் போன்றவற்றில் ஆர்வம் உள்ளவர்களைக் கண்டறிந்து விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

வறுமையின் தாயகம் உணவுப் பற்றாக்குறை; வன்முறையின் பிறப்பிடம் உணவுப் பற்றாக்குறை; அமைதியின் இருப்பிடம் உணவு உற்பத்தியில் தன் நிறைவு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

விவசாயிகள் கடந்த 50 ஆண்டுகளாக நாடு முழுவதும் எவ்வளவோ

காயப்பட்டு இருக்கிறார்கள். சோதனைகளைத் தாங்கி இருக்கிறார்கள். இயற்கைச் சீற்றங்களினால் பாதிப்படைந்திருக்கிறார்கள். இனியாவது அவர்கள் வாழ்வில் மாற்றம் வர வேண்டும். தற்போது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் கொஞ்ச நஞ்சம் பேரின் மனதில் நம்பிக்கை குறையுமேயானால் இந்தியாவின் ஆரோக்கியம் கெட்டு உலக நாடுகளின் மத்தியில் தரம் தாழும் நிலை கண்டிப்பாக உருவாகும். இதுவரை விவசாயம் செய்து, உணவு உற்பத்தி செய்து, வயிற்றுப் பசி போக்கிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த வணக்கமும், நன்றியும் சொல்வோம்.

சுதந்திரம், இட ஒதுக்கீடு, சமூகப் பிரச்னைகளுக்கு ஒன்று சேர்ந்தது போல் அனைவரும் சேர்ந்து வீழ்ந்து கிடக்கும் விவசாயத்தைத் தூக்கி நிறுத்த சபதம் ஏற்போம். பூமியின் ஆரோக்கியமே எங்கும் பசுமையாக இருப்பதுதான் என்பதை நிலை நாட்டுவோம். அனைத்துத் தொழில்களுக்கும் தாயாக இருப்பது விவசாயமே! பிற தொழில்கள் அனைத்தும் விவசாயம் என்ற தாய் ஈன்ற குழந்தைகளே! விவசாயத்தின் மீது அனைவருக்கும் கவனம் என்பது காலத்தின் கட்டாயம். காலத்தின் தேவை மட்டுமன்றி நம்முடைய முக்கிய கடமை அதுவே யாகும். வாழ்க விவசாயம்! வளர்க விவசாயிகளின் பொருளாதாரம்!

கட்டுரையாளர்:

விவசாயி.

## கொடுவிலார்பட்டி கண்மாயில் தண்ணீர் தேக்க அமைச்சர் உறுதி

பி.டி.ராஜன் கால்வாயை சீரமைத்து, கொடுவிலார்பட்டி கண்மாய் மற்றும் கடைமடை கண்மாய்கள் வரை தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வியாழக்கிழமை உறுதியளித்தார்.

தேனி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட ஸ்ரீரங்கபுரம், தாடிச்சேரி, தப்புக்குண்டு, கோவிந்தநகரம், அம்பாசமுத்திரம், கொடுவிலார்பட்டி ஆகிய கிராமங்களில் போடி சட்டப்பேரவைத் தொகுதி அதிமுக

வேட்பாளரான அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

அப்போது, கொடுவிலார்பட்டி சௌடாம்பிகை கோயில் திடலில் பொதுமக்கள் மத்தியில் அவர் பேசியது: போடி சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட விவசாய நிலங்கள் பயனடையும் வகையில், 18 ஆம் கால்வாயை நீட்டிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றதும், பி.டி.ராஜன் கால்வாய் மற்றும் தந்தை பெரியார் கால்வாய்களை முழுமையாகச் சீரமைத்து, கொடுவிலார்பட்டி கண்மாய் உள்ளிட்ட கடைமடை கண்மாய்கள் வரை தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முன்னாள் எம்.எல்.ஏ.கள் ஆர்.டி. கணேசன், பொன்னுபிள்ளை மற்றும் அதிமுக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

## காங்கயம் அருகே விளைந்த 7 கிலோ தேங்காய்

காங்கயம் அருகே, விவசாயி ஒருவரின் தென்னை மரத்தில் 7 கிலோ எடை கொண்ட பெரிய அளவிலான தேங்காய் காய்த்துள்ளது.

காங்கயம் அருகே, மறவபாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட அலுக்குட்டிவலசு கிராமத்தைச் சேர்ந்தவர் நடராஜ். விவசாயி. இவரது தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் ஒன்றில் விளைந்த குலையில், ஒரே ஒரு பிஞ்சு மட்டுமே இருந்தது. நாளாக நாளாக பிஞ்சு முதிர்ந்து, வழக்கத்துக்கு மாறாக, மிகப் பெரிய அளவிலான தேங்காயாக உருவானது.

தற்போது இளநீராக இருக்கும் நிலையில் அதைப் பறித்து எடை போட்டபோது அதன் எடை 7 கிலோவாக இருந்தது. சாதாரணமாக இளநீர்த் தேங்காய் 2 கிலோ எடைக்கு அதிகமாக இருக்காது.

இந்த 7 கிலோ எடை கொண்ட அதிசயத் தேங்காயை அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

## கோடை வெயிலில் இருந்து கால்நடைகளை பாதுகாப்பது எப்படி?ஆட்சியர் அ.ஞானசேகரன் விளக்கம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் கோடை வெயிலில் இருந்து கால்நடைகளை பாதுகாப்பது எப்படி என்பது குறித்து மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் இந்த ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. வழக்கத்தை விட 5 டிகிரி வெப்பம் உயர்ந்துள்ளதால், பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை பொதுமக்கள் வெயிலில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடைகளை வளர்க்கும் விவசாய பெருங்குடி மக்கள், கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை வைத்திருப்போர் தங்களது கால்நடைகளை பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

மேலும், கறிக்கோழி வளர்ப்போர், முட்டைக்கோழியை வைத்து பராமரிக்கும் பண்ணையாளர்கள், நாட்டுக் கோழி வளர்ப்பவர்கள் அதற்கான தீவனத்தில் புரதச் சத்து அதிகமாக கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மாறாக, அமினோ அமிலத்தின் விகிதாச்சாரம் மாறாமல் சரியாக கொடுப்பதுடன், தானிய சத்துக்களையும் குறைத்துக் கொடுக்க வேண்டும்.

அதிக எண்ணெய் சத்து மிகுந்த தீவனத்தை கோழிகளுக்கு கொடுத்து வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து கோழிகளை பாதுகாக்கலாம். வெயில் தாக்கத்தை குறைக்க குளிர்ந்த, சுத்தமான தண்ணீரை கோழிகளுக்கு தேவையான அளவுக்கு மேல் குடிக்க வைக்கலாம்.

மேலும், கோழிப்பண்ணையைச் சுற்றி கொட்டகையின் இருபுறமும் குளிர்ந்த தண்ணீரில் நனைந்த சாக்குப் பைகளை (சணல்) கட்டிவிடலாம். கொட்டகையில் மின்விசிறி அமைத்து வெயில் தாக்கத்தை குறைக்கலாம். கால்நடைகளை வெயில் நேரத்தில் சூரிய வெளிச்சம் படும்படியான இடங்களுக்கு மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதை முற்றிலும் தவிர்க்க

வேண்டும். காலை 10 முதல் மாலை 4 மணி வரை கால்நடைகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதை தவிர்ப்பது நல்லது.

கீற்று கொட்டகையில் மாடுகளை தங்கவைப்பதுடன், நிழல்தரும் மரங்கள் நிறைந்த பகுதியில் மாடுகளை கட்டி வைக்கலாம். மாட்டுக் கொட்டகையில் மின்விசிறிகள் பொருத்துவதுடன், மாடுகளை நல்ல காற்றோட்டமுள்ள இடங்களில் கட்டி வைத்துப் பராமரிக்க வேண்டும்.

அதிமாக மூச்சுவாங்கும் கால்நடைகளுக்கும், வெயிலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கும் வெப்ப அயற்சியைத் தடுக்கும் மருந்துகள் கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள மாடுகளை குளம், குட்டை, ஏரிகளில் உள்ள தண்ணீரை கால்நடைகளுக்குத் தெளித்து வெப்ப தாக்குதலைக் குறைக்கலாம். குளிர்ந்த தீவனப் பயிர்கள், திரவ உணவுகளைக் கொடுத்து கால்நடைகளை பாதுகாக்கலாம். திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், கோழிப்பண்ணை வைத்திருப்போர், மாட்டுப் பண்ணை வைத்திருப்போர் இந்த வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது கால்நடைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வடமாநில கோடைபானம்

வெயில் காலத்தில் புதினா, மாங்காய், கருப்பு உப்பு என்ற 'காலாநமக்' ஆகியன சேர்த்து வடமாநிலங்களில் 'ஆம்பன்னா' என்ற பானம் விற்கப்படுகிறது. அதிக நீர்ச்சத்துள்ள புதினா வெயில்கால தாகத்தை தணிக்கிறது. 'புதினா' என்ற சொல் இந்திச்சொல் தான். தமிழில் இதற்கு தனிச்சொல் இல்லாமல் அப்படியே பன்படுத்துகிறோம். ஆம்பன்னாவில் ஐஸ்கட்டி எதுவும் சேர்க்கப்படுவதில்லை. இயற்கையான மண்பானை குளிர்ச்சியில் தான் ஆம்பன்னா பரிமாறப்படுகிறது. 'காலாநமக்' மணமும்

சுவையும் தென்னிந்தியர்களுக்கு பிடிக்காது என்பதால் சாதாரண உப்பு சேர்ப்பர்.

**மாம்பழம் விளைச்சல் குறைவு: விலையோ 'விர்...'**

கடம்பத்துார்: கோடை கால மழை இல்லாததால், மாம்பழ விளைச்சல் குறைந்துள்ளதால், விலை வழக்கத்தை விட, 100 சதவீதம் உயர்ந்துள்ளது.

மழைக் காலத்தைத் தொடர்ந்து, பனிக் காலத்தில் (தை, மாசி மாதங்கள்) மா மரங்களில் பூக்கள் பூக்கத் துவங்கும். சித்திரை மாதத்தில் துவங்கும் அறுவடைக் காலம் ஆடி 18 வரை தொடரும்.

இந்நிலையில், தற்போது கோடை மழை முற்றிலுமாக இல்லை. இந்தத் தருணத்தில் மழை இருந்தால்தான் மண்ணில் ஈரப்பதம் இருந்தால் தான் மா மரங்களில் உள்ள பூக்களும் காயாக மாறும். தற்போது, மழை இல்லாததால் பூக்கள் பெருமளவில் கொட்டி விட்டதால், மாம்பழ விளைச்சல், 70 சதவீதம் குறைந்துள்ளதாக தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால், கடந்த ஆண்டு, கிலோ 60 ரூபாய்க்கு விற்பனையான பங்கனப்பள்ளி தற்போது, 120 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

இதேபோல், 40 ரூபாய்க்கு விற்பனையான செந்துாரம், 80 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மற்ற வகைகளான ருமேனியா இன்னும் விற்பனைக்கு வரவேஇல்லை.

இனி, தமிழகத்தில் கோடை மழை போதிய அளவு பெய்தால் மட்டுமே, தற்போதுள்ள பூவும், பிஞ்சும் காயாக மாறி, வரத்தும் அதிகரிக்கும். இதன் மூலம், விலையும் குறைய வாய்ப்பு இருப்பதாக, விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்த்துள்ளனர்.

**மலை மாவட்டத்தில் பரவலாக மழை 'வானம்' பார்த்த விவசாய தோட்டங்களில் ஈரம்**

ஊட்டி: நீலகிரியின் பல இடங்களில், நேற்று பரவலாக பெய்த மழையால், காலநிலையில் குளிர்ந்தது; வானம் பார்த்து காத்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

நீலகிரியில், கடந்த சில ஆண்டுகளாக இயல்பு மாறிய காலநிலை நிலவுகிறது. பொதுவாக, நவம்பர், டிசம்பரில் நடுங்க வைக்கும் பனிப்பொழிவு, இம்முறை அவ்வளவாக இல்லை; உதறல் எடுக்க வைக்கும் குளிரையும், மலை மாவட்ட மக்கள், அவ்வளவாக அனுபவிக்கவில்லை.

வழக்கத்துக்கு மாறாக, வெயிலின் சுடுதல் சற்று அதிகமாகவே இருந்தது; குறிப்பாக, 'குளு, குளு' ஊட்டியில் கூட, குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை காட்டிலும் கூடியது. குன்னூர், கோத்தகிரி, கூடலூர் போன்ற இடங்கள், சமவெளி பிரதேச காலநிலையை அனுபவிக்க செய்தன, என்பதில் மிகையில்லை. அதிகபட்சம், 18 - 24 டிகிரி செல்சியஸ் வெப்பத்தை கண்டிராத, ஊட்டி, குன்னூர் நகரங்கள், 28 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தை எதிர்கொண்டன.

மரம், செடி கொடிகளின் அசைவில் இருந்து கிடைத்த இயற்கையான காற்றில், இதம் கண்டு வந்த மலை மாவட்ட மக்கள், மின் விசிறியின் சுற்றலில் உருவாகும் செயற்கை காற்றில், உடல் சூட்டை தணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

மலை மாவட்டத்தில் குறைந்து போன மழை வளம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சற்று அதிகமாகவே பயமுறுத்தியது. கோடையில் பெய்ய வேண்டிய மழை, தொடர்ந்து ஏமாற்றியதால், சாகுபடிக்கு தயாராக வேண்டிய விவசாய நிலங்களில் வறட்சி தென்பட்டது. விதைக்கப்பட்ட விதைகள், மழை நீருக்காக 'தவம்' கிடந்தன; விவசாயிகளோ, மழைக்காக, வானம் பார்த்து காத்திருந்தனர்.

பல இடங்களில், மக்களின் தாகம் தணித்து வந்த, நீராதாரங்கள் வற்றிப் போய், தரை தட்டியது; விளைவு, நீர் வினியோகம் செய்ய முடியாமல், உள்ளாட்சி அமைப்புகள் திக்குமுக்காடின. மழை பொய்த்தால், என்ன விலை கொடுத்தாலும், தண்ணீர் கிடைக்காது என்கிற நிலை உருவானது.

இந்நிலையில், நேற்று மதியம், குன்னுார், கோத்தகிரி, ஊட்டி உட்பட இடங்களில் பரவலாக மழை பெய்தது; விவசாய நிலங்கள் நனைந்தன. வியர்க்க வைத்த வெப்பத்தின் தாக்கம், சற்றே குறைந்தது.

'இன்னும் சில தினங்கள் இந்த கோடை மழை நீடிக்க வேண்டும்' என, மக்கள் பிரார்த்தனை செய்ய துவங்கிவிட்டனர்.

## எதிர்பார்த்த விலையின்றி வியாபாரிகள்பாதிப்பு: இலவம் காய் விளைச்சல் அதிகரிப்பு

பழநி:பழநி பகுதியில் இலவங்காய் விளைச்சல் அதிகரித்துள்ள போதும் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் வியாபாரிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் பழநி, ஆயக்குடி, சத்திரப்பட்டி, கணக்கன்பட்டி,கொடைக்கானல் மலைப்பகுதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஏராளமான இலவம் மரங்கள் உள்ளன. ஜனவரியில் இலவம் காய் காய்க்க துவங்கி மார்ச், ஏப்ரலில் காய் பெரிதாகிவிடும். அவற்றை பறித்து காயவைத்து மூடையாக்கி துாத்துக்குடி, ஈரோடு, கரூர் பகுதிகளுக்கு மொத்தமாக அனுப்பி வைக்கின்றனர்.

இவ்வாண்டு மழை பெய்த காரணத்தால் கடந்தாண்டைவிட மரங்களில் காய்ப்பு அதிகமாக உள்ளது. இருப்பினும் எதிர்பார்த்த விலை கிடைக்காததால் மரங்களை குத்தகைக்கு எடுத்த வியாபாரிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். ஆயக்குடி முத்துசாமி கூறுகையில்,“ பழநி பகுதியிலிருந்து மெத்தை, தலையணை தயாரிக்க பயன்படுத்தப்படும் இலவம் பஞ்சு காய் ஆண்டிற்கு 150 டன்வரை வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

பருவமழை சரியாக பெய்தால் ஒரு இளம் மரத்தில் அதிகபட்சமாக மூவாயிரம் காய்கள் வரை கிடைக்கும். இவ்வாண்டு காய்ப்பு நன்றாக உள்ளது. வரத்து அதிகரிப்பு காரணமாக

கடந்த ஆண்டு ரூ.2க்கு விற்ற ஒரு காய் தற்போது ஒருரூபாய்க்கு விற்கிறது. விலைகுறைவு, ஆட்கள் காய் பறிப்பு கூலி அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விளைச்சல் இருந்தும் எதிர்பார்த்த லாபம் எடுக்க முடியவில்லை," என்றார்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி விலை ஏறுமுகம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி விலை ஏற்றம் அடைந்து கிலோ ரூ.10க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் காய்கறிகள் அதிகமாக

பயிரிடப்படுகிறது. முன்பு நாட்டு ரக தக்காளியே விவசாயிகள் பயிரிட்டு வந்தனர்.

ஆனால் தற்போது ஒட்டு ரகம் மற்றும் பந்தல் தக்காளி வகைகளை விவசாயிகள் விரும்பி பயிரிடுகின்றனர். இங்கு தக்காளி கிலோ கணக்கில் ஏலம் விடப்படாமல் பெட்டி கணக்கில் ஏலம் விடப்படுகிறது. ஒரு பெட்டியில் 14 கிலோ தக்காளி இருக்கும். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு வரை ஒரு கிலோ தக்காளி ரூ.20க்கு மேல் விற்பனையானது. இதனைத் தொடர்ந்து தக்காளி மகசூல் கணிசமாக அதிகரித்தது.

ஒரு கமிஷன் கடையில் ஒரு நாளைக்கு 200 பெட்டிகளுக்கு மேல் வரத்து இருந்தது. தற்போது வரத்து பாதியாக குறைந்து 100 பெட்டிகள் வரையே உள்ளது. இந்த அளவு படிப்படியாக குறைந்து வருகிறது. தேவை அதிகரித்துள்ள நிலையில் விலையும் சிறிது சிறிதாக அதிகரித்து வந்தது.

கடந்த வாரம் ஒரு கிலோ தக்காளி ரூ.7 வரை விற்றது. ஆனால் கடந்த இரண்டு நாட்களாக கிலோவுக்கு ரூ.3 அதிகரித்து ரூ.10க்கு விற்றது. ஆனால் சில்லறை விற்பனையில் ஒரு கிலோ

தக்காளி ரூ.20 வரை விற்றது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

# பருப்பு விலை கட்டுக்குள் இருக்கும் : பஸ்வான் உறுதி




பாட்னா : மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் நேற்று கூறியதாவது: பருப்பு வகைகள் விலை மீண்டும் உயர துவங்கியுள்ளதை நாங்கள் அறிந்துள்ளோம். ஆனால், இந்த முறை சராசரி விலையை விட அதிகமாக வாய்ப்பு இல்லை. ஏனெனில் விலை கட்டுக்குள் வைக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்திருக்கிறது. விவசாயிகளிடம் இருந்து இந்திய உணவுக் கழகம் 50,000 டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்துள்ளது. இதுதவிர, உள்நாட்டு தேவைக்காக 25,000 டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒரு லட்சம் டன் விவசாயிகளிடம் இருந்து இந்த சீசனில் கொள்முதல் செய்யப்படும். இவற்றை இருப்பு வைத்து விலை உயராமல் சமாளிக்கப்படும். அந்தந்த மாநிலங்களில் பருப்பு தேவையை தெரிவிக்குமாறு கடிதம்

எழுதியிருந்தேன். ஆனால், எந்த மாநிலமும் விவரம் அளிக்கவில்லை என்றார்.

## மண் மாதிரி எடுப்பது எப்படி? வேளாண்துறை ஆலோசனை

பழநி, : மண் பரிசோனைக்கு மண் எடுப்பது குறித்து வேளாண்துறையினர் கூறியுள்ளனர். இதுகுறித்து வேளாண்துறையினர் விடுத்துள்ள பத்திரிக்கை குறிப்பில் கூறியிருப்பதாவது: மண் மாதிரி ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால் போதும். அந்த அரை கிலோ மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால் தான் நிலத்தின் உண்மையான வளம் தெரியும். மண் மாதிரி எடுக்கும் போது ஒவ்வொரு முறை பயிர் செய்வதற்கு முன்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும் இடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைபப்பட்ட காலத்தில் தான் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும்.

எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவைகளை மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

காலப்பயிர்களுக்கு ‘வி’ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 சென்டி மீட்டர் கனத்திற்கு சீராக மண்னை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை

அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரைகிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டு கட்ட வேண்டும்.

மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன் பயிர் அடுத்து பயிரிடப் போகும் பயிர் பிரச்சனை இருப்பின் அதன் விபரங்களுடன் வேளாண்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## போதிய விலை இல்லாததால் கோழி தீவனமாகும் கலர் கருவாடுகள் கிலோ ரூ.3க்கு விற்பனை

ராமநாதபுரம், : அரியமான் கடற்கரை பகுதியிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு கோழி தீவனத்திற்காக கலர் கருவாடுகள் அனுப்பப்படுகின்றன.ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மீன்கள் முட்டையிட்டு குஞ்சுபொறிக்கும் காலம் என்பதால் தமிழக கடலோரப்பகுதிகளில் 45 நாட்களுக்கு மீன்களின் இனவிருத்தி காலம் என மத்திய அரசு அறிவித்து அந்த சமயங்களில் மீன்பிடிக்க மீனவர்களுக்கு தடை செய்துள்ளது. இதையடுத்து மீனவர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள ஓய்வு நாட்களில் மீன்பிடி விசைப்படகுகளில் உள்ள இயந்திரங்களில் உள்ள பழுதுகளை நீக்கி உதிரிபாகங்களை மாற்றுதல் மற்றும் மீன்பிடி வலைகளை சரிசெய்தல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே அரியமான் கடலோரத்தில் தற்போது கலர் மீன் கருவாடுகள் அதிகளவு காய வைக்கப்படுகிறது. பெரும்பாலான மக்கள் இந்த வகை மீன்களை உணவாக பயன்படுத்தாத காரணத்தால் பிடிக்கப்படும் கலர் மீன்கள் அனைத்தும் கடலோரத்தில் நன்கு உலர வைக்கப்படுகின்றன. பின்னர் மூடைகளாக பேக்கிங் செய்யப்பட்டு தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கு இயந்திரங்கள் மூலம் நன்கு அரைக்கப்பட்டு கோழிபண்ணைகளில் வளர்க்கப்படும் கறிக்கோழிகளுக்கு உணவாக அளிக்கப்படுகின்றது. இந்தவகை மீன்கள் கிலோ ரூ. 3 முதல் 4 வரை சில்லரை மீன் வியாபாரிகளிடம் விற்கப்படுகிறது. சில்லரை மீன் வியாபாரிகள் இதை நன்கு உலர வைத்து

கிலோ ரூ. 7 முதல் 10 வரை மொத்த மீன் வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றனர்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் கூறுகையில், பலதரப்பட்ட சிறிய மீன்கள் இதில் கலந்திருப்பதால் இதை கலர் கருவாடுகள் என்று பெயர் வைத்துள்ளோம். இந்த மீன்களுக்கென தனியாக வலை விரிப்பது கிடையாது. குறைந்தவிலை மற்றும் ருசி இல்லாத காரணத்தால் இப்பகுதி மக்கள் யாரும் இதை உணவாக பயன்படுத்துவது கிடையாது. இதனால் இதை பதப்படுத்தி தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு அனுப்பி வருகிறோம். நாமக்கல் மாவட்ட வியாபாரிகள் கோழிகளுக்கு உணவாக பயன்படுவதால் இந்த கலர் மீன்களை நல்ல விலை கொடுத்துவாங்குகின்றனர் என்று கூறினர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 1 லட்சத்து 70 ஆயிரம் மரக்கன்றுகள் நட உத்தரவு



திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 1 லட்சத்து 70 ஆயிரம் மரக்கன்றுகள் நட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. மரம் வளர்க்க முக்கியத்துவம் பல்வேறு காரணங்களினால் பருவநிலைகளில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக காடுகள் அழிக்கப்படுவதும், மரங்கள் வெட்டப்பட்டு குடியிருப்புகளாக மாற்றப்படுவதும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. இதனால் மழைப்பொழிவு குறைதல், மண் அரிப்பு ஏற்படுதல், புவி வெப்பமயமாதல் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதை கட்டுப்படுத்த மரம் வளர்ப்பதற்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதுதொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள், பேரணிகள்

நடத்தப்படுகின்றன. மேலும், வனத்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி முகமை உள்ளிட்ட துறைகளின் மூலம் மரங்கள் நடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை மூலம் 1 லட்சத்து 70 ஆயிரம் மரக்கன்றுகள் நட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக மாவட்டம் முழுவதும் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு ஏற்கனவே பயிற்சி அளிக்கப்பட்டது. அந்த பயிற்சியில் மரக்கன்றுகளை நடும் முறைகள், உரமிடுவது, பராமரிப்பது, பாதுகாப்பது உள்ளிட்டவை தொடர்பாக சிறுமலை இடைபடு காடுகள் துறை அதிகாரிகள் விளக்கமும், பயிற்சியும் கொடுத்தனர்.

விரைவில்நடப்படுகிறது

இது குறித்து ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகள் கூறும்போது, ‘திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் 1 லட்சத்து 70 ஆயிரம் மரக்கன்றுகளை நட வேண்டும் என மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அரசு உத்தரவிட்டு உள்ளது. இதற்காக அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. சட்டமன்ற தேர்தல் முடிந்த பிறகு மரக்கன்றுகளை நடும் பணி முடுக்கி விடப்படும். மரங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படும். இதில் அவர்களுக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் 1 லட்சத்து 70 ஆயிரம் மரக்கன்றுகளையும் நட்டுவிடுவோம். அவை மரமாகும் வரை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதே போல மேலும் சில துறைகள் சார்பிலும் மரக்கன்றுகள் நடப்பட இருக்கிறது’ என்றனர்.